## பிளாஸ்டிக் தடை

# முக்கிய துறைகளுடன் அரசு இன்று ஆலோசனை

**சென்னை, அக். 31:** தமிழகத்தில் பிளாஸ்டிக் தடை உத்தரவை செயல் படுத்த இரண்டு மாதங்களே உள்ள நிலையில், முக்கிய அரசுத் துறைக ளுடன் தமிழக சுற்றுச்சூழல் துறை வியாழக்கிழமை ஆலோசனை நடத் துகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், பிளாஸ்டிக் தடையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்த திட்டங்கள் வகுக்கப்பட உள்ளன.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு ஜன வரி 1-ஆம் தேதி முதல் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக்குகளுக்கு தடை விதிக் கப்படும் என முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார். இந்த நிலையில், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்து வதற்கான பிரதான துறைகளான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற் றும் ஊராட்சித் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, சுகாதாரம் மற் றும் குடும்பத் துறை ஆகியன உள் ளன.

மேலும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மண்டல வாரியாக, மூத்த ஐ.ஏ.எஸ்., அதிகாரிகள் அமுதா, சந்தோஷ்பாபு, ராஜேந் திர ரத்னு ஆகியோர் கண்காணிப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள் ளனர்.

**இன்று ஆலோசனை:** இந்த நிலையில், தமிழகத்தில் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடையை உரிய காலத்தில் (2019 ஜனவரி 1) நடைமுறைப்படுத்து வது தொடர்பாக முக்கிய துறை கள் மற்றும் கண்காணிப்பு அதிகா ரிகளுடன் வியாழக்கிழமை (நவ. 1) ஆலோசனைக் கூட்டம் நடைபெற வுள்ளது.

இந்தக் கூட்டம் தலைமைச் செய லகத்தில் சுற்றுச்சூழல் துறை அமைச் சர் கே.சி.கருப்பணன் தலைமையில் நடைபெறும் என அந்தத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தக் கூட்டத்தில், பிளாஸ்டிக் தடையை நடைமுறைப்படுத்துவது தொடர் பாக சில முக்கிய முடிவுகள் எடுக்கப் படும் எனத் தெரிகிறது.

தினமணி
Thu, 01 November 2018
epaper.dinamani.com/c/3359780(